# கர்நாடக இசைமரபில் கௌமாரம்

116

**ஆரூரன் அருணந்தி**
**முனைவர்பட்ட ஆய்வாளர்,**
**இசைத்துறை,**
**அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,**

**ஆய்வுச்சுருக்கம்**

"உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குஹனே".
கந்தர் அநுபூதி

முருகப்பெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்ட கௌமார நெறியானது மிகத் தொன்மை வாய்ந்ததாகும். பண்டைத் தமிழர் பண்பாட்டிலே குறிஞ்சி நிலத்திற்குரிய தெய்வமாக கொள்ளப்பட்டவர் சேயோன் (முருகனுடைய வேறு பெயர்) ஆவார். தமிழ் கடவுளாகப் போற்றப்படுகின்ற கந்தனை இசை வாக்கேயகாரர்கள் தமது பக்தித்திறத்தாலும், மொழிச் செழுமையாலும் பாடிப்பரவியுள்ள தன்மையை வர்ணனை, பக்தி, காதல், வீரம் போன்ற தலைப்புகளில் அலசி கௌமார நெறியின் தனித்தன்மை இங்கு வெளிக் கொணரப்பட்டுள்ளது.

**முன்னுரை**

"முருகு"என்றால் அழகு. முருகன் அழகான தமிழ்க்கடவுள் என்பதனை "அழகென்ற சொல்லிற்கு முருகா" ,முருகனின் மறுபெயர் அழகு" போன்ற பாடல் வரிகள் எடுத்தியம்பி நிற்கின்றன.

முருக வழிபாடானது வேதகாலத்திலிருந்து தொன்று தொட்டு வருகின்ற ஒரு தொன்மையான விடயமாகும். மிகப்பழமையான ரிக் வேதத்திலே முருகனுக்கு அக்னிபூ, ஸதஸபதி (இந்திரனுக்கு ப்ரியமான வர்) ஸ்கந்த, சுப்ரமண்ய போன்ற பெயர்கள் காணப்படுகின்றன.

க்ருஷ்ண யஜீர் வேதத்திலே பின்வரும் பெயர்கள் காணப்படுகின்றன.

"தத் குமாராய வித்மஹே கார்த்திகேயாய தீமஹி
தன்நோ ஸ்கந்த ப்ரசோதயாத்"

தைத்திரீய ஆரண்யகத்தில் ……

"தத் புருஷாய வித்மஹே மஹாசேனாய தீமஹி
தந்தோ ஸ்கந்த ப்ரசோதயாத்" என்று காணப்படுகின்றது.

முருகன் போரிற்கு உரிய தெய்வம் என்பதனை பகவத்கீதையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"புரோதஸம் ச முக்யம் மம



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

வித்தி பர்த ப்ரஹஸ்பதிம்
சேனானினம் அஹம் ஸ்கந்த
ஸரஸம் அஸ்மி ஸாகர”

- (பகவத்கீதை உh:10:24)

ஐஐ யஅ ளுமயனெயஇ வாந டழசன ழக றயசஸ

வேதகாலத்திற்கு பிற்பட்ட சங்க இலக்கிய காலத்திலும் முருகவழிபாடு செழிப்பாக இருந்தது என்பதனை பின்வரும் விடயங்களை எடுத்துக்காட்டுகின்றன.

திருமுருகாற்றுப்படையில் முருக வழிபாட்டின் மூன்று நிலைகள் விளக்கப்பட்டுள்ளது. மலைப் பிரதேசங்களில் வாழ்கின்ற குறவர் இன மக்களுடைய வழிபாட்டு முறை “வெறியாட்டு” ஆகும். “வேலன்” அசைவக்கடவுளாகவும், ஆட்டு ரத்தத்துடன் தினை கலந்து படையல் வைத்து வழிபடும் முறை சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளது.

சிலப்பதிகாரத்திலே முருகப் பெருமான் “ செவ்வேள்” என்ற பெயரில் போற்றபட்டார் என்பதை “பிறவாயாக்கைப் பெரியோன் கோயிலும் அறுமுகச் செவ்வேள்; அணிதிகழ்கோயிலும்” (சிலம்பு: இந்திரவிழா 169-172) என்ற பாடல் வரிகள் செப்புகின்றன. மேலும் கடலிலே சென்று ஒளிந்து கொண்ட சூரனை முருகப்பெருமான் அலைகடலின் திரைகளையே அரங்காகக் கொண்டு துடிகொட்டி ஆடிய துடிக்கூத்து பற்றிய கந்தபுராணச்செய்தி சிலம்பில் பின்வறுமாறு காணப்படுகின்றது.

“மாக்கடல் நடுவண் நீர்த்திரை அரங்கத்து முன்னின்ற
சூர்த்திறங்கடந்தோன் ஆடிய துடியும்”

- (கடலாடு காதை : 46-55)

கோவலனுடைய அழகுச்சிறப்பை இளங்கோ அடிகள் பின்வருமாறு வர்ணிக்கின்றார்.

“மதிமுக மடவார் தம் பண்தேய்த்த மொழியினார்
ஆயத்துப் பாராட்டி கண்டேத்தும் செவ்வேள்”

- ஜமங்கலவாழ்த்து : 37- 39ஸ

இவ்வாறாக தொன்று தொட்டு வந்த இந்த பக்தி நெறியானது எவ்வாறு இசை முறையில் கையாளப்பட்டு வருகின்றது என்பதனை இந்த ஆய்வில் நாம் காணலாம்.

முருகபக்தியில், ஔவையார், அருணகிரிநாதர், தேவராயசுவாமிகள், பாம்பன்சுவாமிகள் போன்றோர் சிறந்து விளங்கினர். இவர்களுடைய பாடல்களில் காணப்படும் பக்திச்சுவை அளவிடமுடியாதவையாகும்.

ஆதிசங்கரருடைய சுப்ரமண்யபுஜங்கம், அருணகிரிநாதருடைய திருப்புகழ், கந்தர் அநுபூதி, கந்தர் அலங்காரம், வேல்விருத்தம் மயில்விருத்தம் போன்ற பாடல்களும், தேவாராய சுவாமிகளுடைய கந்தசஷ்டிகவசம், பாம்பன்சுவாமிகளுடைய சண்முககவசம் போன்றவையும் மிகப்பிரபலம் வாய்ந்தவையாகும்.

கர்நாடக சங்கீத மும்மூர்த்திகளுள் ஒருவராகிய முத்துஸ்வாமி தீக்ஷிதர் குஹனையே குருவாகக் கொண்ட படியால் “குருகுஹ” எனும் முத்திரையை தமது கிருதிகளில் பதித்துள்ளார்கள். மேலும் கவிக்குஞ்சரபாரதி, கோடீஸ்வர ஐயர், பாபநாசம் சிவன், பெரியசாமி தூரன், மழவை சிதம்பரபாரதி, அண்ணாமலை ரெட்டியார்,



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

குரு சுரஜானந்தா, யாழ்ப்பாணம் வீரமணி ஐயர் போன்றோர் முருகப்பெருமானை தம் கவித்திறத்தால் இசைவழிபாடு இயற்றினர் என்றால் மிகையல்ல.

**வர்ணனை**

தமிழ்த் தெய்வமாகிய முருகனுடைய உருவச்சிறப்பையும், அவனுடைய திருவுலாக்காட்சிகளையும் வர்ணித்துப்புனையப்பட்ட இசைப்பாடல்களின் அழகையும் இங்கு காண்போம்.

சந்தனமும் ஜவ்வாதும் சேர்ந்து மணம் கமழ
பாலாபிசேகமுடன், வெற்றித்திருநீறணிந்து
தங்கரதத்தேரினிலே பக்தர்படை சூழ்ந்து வர
வள்ளி தெய்வயானையுடன் காட்சி தரும்
உன்னழகைக் காண ஆயிரம் கண் வேண்டும்

என்று அருளவன் முருகனுடைய அருள் உலாவைக் கண்முன் நிறுத்துகின்றார்.

“செங்கதிரும் முழுமதியும் சேர்ந்தமைந்த சுந்தரன்” என்று முருகனை மிக அழகாக வர்ணித்திருக்கிறார்.

“நிறைமதி முகமெனும் ஒளியாலே
நெறி விழி கணை எனும் நிகராலே”

என்று அருணகிரிநாதர் திருப்புகழில் பாடியதை பாபநாசம் சிவன் அவர்கள் அடியொற்றி தனது ஸாவேரி ராக க்ருதியாகிய “முருகா முழுமதி பழிக்கும் அறுமுகா”

என்று மனமுருகிப்பாடியுள்ளார். மேலும் தனது தோடி ராகக் க்ருதியில் “குன்றமனைய ஈராறு தோள்கள்” என்று முருகனின் தோள் வலிமைச்சிறப்பு பற்றி பாடிப்பரவசம் அடைந்தார்.

(கார்த்திகேய காங்கேய – தோடி – ஆதி – பாபநாசம் சிவன்)

“முருகனின் மறுபெயர் அழகு – அவன்
முறுவலில் மயங்குது உலகு” என்று பெஹாக் ராக க்ருதியில் குரு சுரஜானந்தா அவர்கள் மிக அழகாகக் கூறியுள்ளார்கள். சுப்ரமண்ய பாரதியாருடைய காவடிச்சிந்திலே

“வில்;லினை ஒத்த புருவம் வளைத்தனை வேலவா” என்று முருகனின் புருவ அழகை வர்ணித்திருக்கிறார்.

“அழகு தெய்வம் அருளின் தெய்வம்
குழந்தை தெய்வம் குமர தெய்வம்”

என பெரியசாமி தூரன் அவர்கள் அருளை வழங்குகின்ற முருகனுடைய அழகுச் சிறப்பைக் கூறியுள்ளார்.

(பழனி நின்ற – காபி - ரூபகம் - பெரியசாமி தூரன்)

பக்தி

“பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப்புகழ் பாடி”

என்று மனமுருகிப் பாடிய அருணகிரிநாதருடைய முருக பக்திக்கு நிகர் ஏது?

பக்தி மேலீட்டில் நெக்குருகி முருகப்பெருமானை இறைஞ்சி அழைப்பது போல் பின்வரும் பாடல்வரிகள் அமைந்திருக்கின்றன.

“அறியாது நான் செய்த பிழையால் நீ வெறுத்தாயோ
அன்பே வடிவம் கொண்ட அழகா நீ சினந்தாயோ.
சிறியேன் என் குறை எல்லாம் பொறுத்தே அருள் செய்வாய்



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

செந்தில் மாநகர் வாழும் தேவாதி தேவனே"

(முருகாமுருகா - ஸாவேரி – மிஸ்ரசாபு – பெரியசாமிதூரன்)

"பாவி என்று நீயே தள்ளினால்

பாரில் வேறு புகல் ஏதைய்யா"

என்று அழுது இறைவனிடம் மன்றாடுவது போல இந்த வரிகள் அமைந்துள்ளது. கொடிய நோய்கள் அலைமோதும் பாவகடலில் வீழ்ந்து உயிர் தவிக்கும் என்னை காத்து ரட்சித்தருள வேண்டும் என்பது போல் இந்தக் க்ருதி அமைந்துள்ளது.

(கூவி அழைக்க – சிந்துபைரவி – ஆதி – பாபநசம் சிவன்)

பக்தியின் மூலமாக அறக்கருத்துக்களை விதைத்த பெருமை ராமலிங்க சுவாமிளையே சாரும் .

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற

உத்தமர் தம் உறவு வேண்டும்.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்

உறவு கலவாமை வேண்டும்

பெருமை பெறும் நினது புகழ்பேச வேண்டும்

பொய்மை பேசாதிருக்க வேண்டும்

பெருநெறி பிடித்தொழுக வேண்டும்

மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்

மருவு பெண்ணாசை மறக்க வேண்டும்

உன்னை மறவாதிருக்க வேண்டும்

மதி வேண்டும் நின்கருணை நிதிவேண்டும்

நோயற்ற வாழ்வு நான் வாழ வேண்டும்

தருமமிகு சென்னை கந்த கோட்டத்துள் வளர்

தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவ மணி

சண்முகத் தெய்வ மணியே ……

ஒன்று முருகபக்தியையும், வாழ்வு நெறிச் சிந்தனைகளையும் ஒன்றுசேர அள்ளி வழங்கியுள்ளார்.

காதல்

அழகனாகிய முருகனைத் தலைவனாகப் பாவனை செய்து காதல் ரஸம் ததும்ப மகிழ்ச்சி, பிரிவாற்றாமை போன்ற உணர்ச்சிகளை பெரிதும் காட்டும் பல்வேறு இசை உருப்படிகள் காணப்படுகின்றன.

பூங்காவிலே தலைவனை கூடின தலைவியின் உணர்ச்சிப் பிரவாகத்தினை இந்தப்பாடல் வரிகள் இயம்பி நிற்கின்றன.

"வண்டிசைபாடும் எழில் வசந்த பூங்காவில்

வந்து சுகம் தந்த கந்தனை என் காந்தனை"

"கண்ட நாள் முதலாய் காதல் பெருகுதடி

கையினில் வேல்பிடித்த கருணை சிவபாலனை…."



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லும் போது சந்தித்த தருணங்களை மீட்டிப் பார்க்கின்ற தலைவியினுடைய மன எழுச்சி பின்வருமாறு அமைகிறது.

நீலமயில் தன்னை நெஞ்சமும் மறக்கவில்லை
நேசமுடன் கலந்த பாசமும் மறையவில்லை
கோலக்குமரன் மனக் கோயிலில் நிறைந்து விட்டான்
குறுநகை தனைக் காட்டி நறுமலர் சூட்டி விட்டான்
(கண்ட நாள் முதலாய் - மதுவந்தி – ஆதி – N.ளு சிதம்பரம்)

இது போன்ற உணர்வைப் பிரதிபலிக்கும் இன்னொரு பாடலாக கல்கி கிருஷ்ணமூர்த்தியின் “பூங்குயில் கூவும் பூஞ்சோலையில் ஒருநாள் மாமயில் மீது மாயமாய் வந்தான்” என்ற பாடல் அமைகின்றது.

முருகப்பெருமான் வள்ளியின் மேல் கொண்ட காதலை அருணகிரிநாதர்
“பாகுகனிமொழி மாதுகுறமகள்
பாதம் வருடிய மாணவாளா”
(திருப்புகழ் : பாதிமதி நதி - ஏழன் நடை)

கூடிக்குலாவி மெத்த குஹனோடு வாழ்ந்ததெல்லாம்
வேடிக்கை அல்லவடி கிளியே வெகுநாளை பந்தமடி”
என்று அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்து வரிகள் சந்தம் சொல்லி நிற்கின்றன.
(வள்ளிக்கணவன் பேரை – செஞ்சுருட்டி – ஆதி)

தலைவியை மறந்த தலைவனாக முருகனைச் சித்தரித்து தலைவியினுடைய பிரிவாற்றமைத் துயரைப் பின்வரும் பாடல் வரிகள் சிறப்பாகச் செப்பி நிற்கின்றன.

கோலமுருகனைக் காண எண்ணி காலமெல்லாம் காத்திருந்தேன்
வேலனோ எனை ஏனோ மறந்தான் ஜாலமோ என் காலமோ அறியேன்
(தில்லானா – ரேவதி – மிஸ்ரசாபு – லால்குடிஜெயராமன்)

**வீரம்**

“அமர்இடர் தீரவமரம் புரிந்த குமரன்” என்று முருகப் பெருமானினுடைய வீரச் சிறப்பினை தமிழ்ப்பண்பாடு அறைந்து நிற்கின்றது.

“வெற்றி வடிவேலன் அவன் வீரத்தினைப் புகழ்வோம்
சுற்றி நில்லாதே போ பகையே துள்ளி வருகுது வேல்!
என்று பாரதியார் கவிதை வரிகளில் போர்க்கடவுளாக சித்தரிக்கப்படுகின்ற ஸ்கந்தப் பெருமான் தெரிகின்றார்.

இந்த வரத்திறத்தை அருணகிரி பெருமான் பின்வருமாறு பதிவு செய்கிறார்.

“கொற்புற்ழெற நட்பற்றவுணரை வெட்டிப்பலியிட்டுக்
குலகிரி குத்துப்பட வொத்தப் பொரவல பெருமாளே”
(திருப்புகழ் : முத்தைத்தரு - ஏழன் நடை)

இதற்கு ஒருபடிமேல் சென்று அழகுடன் கூடிய வீரச்சிறப்பை பின்வருமாறு பாடுகின்றார்.


Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

“அமரர் இடரும் அவுணருடலும்
அழிய அமர் செய்தருள்வோனே
அறமு நிறமு மயிலு மயிலும்
அழகுடைய பெருமாளே”
(திருப்புகழ் : தமரு மமரு - மும்மை நடை)

இவ்வாறாக அமரர் சிறை மீட்ட பெருமாளாக, வெற்றித்திருமகனாக முருகப் பெருமனைப் போற்றி மகிழலாம்.

**முடிவுரை**

தமிழ்க்கடவுளாகப் போற்றப்படுகின்ற முருகப் பெருமானின் பல்வேறான சிறப்புக்களை இசைத்தமிழினூடாகப் பருகுகையில் பேரின்பம் ஏற்படுகின்றது. தமிழ்ப்பதங்கள் முருகனையே நாயகனாகச் சுட்டி நிற்கின்றன. எந்தக்கடவுளர்க்கும் இல்லாத சிறப்புகளை உடைய முருகப் பெருமானின் மேல் எல்லா வகையான உருப்படிகளையும் வாக்கேயகாரர்கள் இயற்றி மகிழ்ந்தார்கள். கீதம், வர்ணம், கீர்;த்தனை, பதம், கவுத்துவம், ஸப்தம், ஜாவளி, தில்லானா, காவடிச்சிந்து என உருப்படி வகைகள் விரிந்து கிடக்கின்றன. இவ்வாறாக தமிழருடைய பண்பாட்டு அடையாளமாக விளங்குகின்ற முருகனை இசைத்தமிழால் வழிபாடு செய்யும் போது தமிழின் இருப்பு, தமிழின் தொன்மை, செழுமை போன்ற சீரிய விடயங்களை உலகிற்குப்பறை சாற்றவும், அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்வதற்கும். பேருதவியாக இருக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

**துணை நூற்பட்டியல்**

1. அருணகிரிநாதர்: திருப்புகழ் - (2008) 8வது பதிப்பு, திருவரசு புத்தக நிலையம் 23, தீதையாளு தெரு, தி. நகர். சென்னை – 17
2. Dr. N. சேலம் ஜெயலஷ்மி – (2000) – சிலப்பதிகாரத்தில் இசைச் செல்வங்கள் ,International Institute of Tamil studies, CPT Campus Chennai 600113
3. Lalgudis G. Jeyaraman – “ Lalgudies Creations “ (2nd edition) – Lalgudi trust – 29, Ramanujam Street. T. Nagar, Chennai 600017.
4. பாபநாசம் சிவன் - கீர்த்தன மாலை (1965) – தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம்
5. பாரதியார் - பாரதியார் கவிதைகள் - தமிழ் இணையக் கல்விக்கழகம்
6. A.N. பெருமாள் - “தமிழர் இசை” (1984) – உலகத்தமிழராய்ச்சி நிறுவனம்,
7. Dr. இ. அங்கயற்கண்ணி – “தமிழக இசையும் ஆய்வும்” (2002) – கலையாகம் வெளியீடு தஞ்சாவூர்